# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# நான்காம் பத்து

## ஐந்தாம் திருவாய்மொழி - வீற்றிருந்து
## எம்பெருமான் தனது பெருமை எல்லாம் தோன்றக் காட்சி அளித்துக் கலக்க, ஆழ்வார் அவனை மங்களாஶாஸனம் பண்ணித் துயர் தீர்ந்து மகிழ்தல்

** வீற்றிருந்து ஏழ் உலகும் * தனிக் கோல் செல்ல வீவில் சீர் *
ஆற்றல் மிக்கு ஆளும் அம்மானை * வெம் மா பிளந்தான் தன்னை **
போற்றி என்றே கைகள் ஆரத் * தொழுது சொல் மாலைகள் *
ஏற்ற நோற்றேற்கு * இனி என்ன குறை எழுமையுமே? 1

மைய கண்ணாள் மலர் மேல் உறைவாள் * உறை மார்பினன் *
செய்ய கோலத் தடங்கண்ணன் * விண்ணோர் பெருமான் தன்னை **
மொய்ய சொல்லால் இசை மாலைகள் ஏத்தி * உள்ளப் பெற்றேன் *
வெய்ய நோய்கள் முழுதும் * வியன் ஞாலத்து வீயவே 2

வீவில் இன்பம் மிக * எல்லை நிகழ்ந்த நம் அச்சுதன் *
வீவில் சீரன் மலர்க் கண்ணன் * விண்ணோர் பெருமான் தன்னை **
வீவில் காலம் இசை மாலைகள் ஏத்தி * மேவப் பெற்றேன் *
வீவில் இன்பம் மிக * எல்லை நிகழ்ந்தனன் மேவியே 3

மேவி நின்று தொழுவார் * வினை போக மேவும் பிரான் *
தூவி அம்புள் உடையான் * அடல் ஆழி அம்மான் தன்னை **
நா இயலால் இசை மாலைகள் ஏத்தி * நண்ணப் பெற்றேன் *
ஆவி என் ஆவியை * யான் அறியேன் செய்த ஆற்றையே 4

ஆற்ற நல்ல வகை காட்டும் * அம்மானை * அமரர் தம்
ஏற்றை * எல்லாப் பொருளும் விரித்தானை எம்மான் தன்னை **
மாற்ற மாலை புனைந்து ஏத்தி * நாளும் மகிழ்வெய்தினேன் *
காற்றின் முன்னம் கடுகி * வினை நோய்கள் கரியவே 5

கரிய மேனி மிசை * வெளிய நீறு சிறிதே இடும் *
பெரிய கோலத் தடங்கண்ணன் * விண்ணோர் பெருமான் தன்னை **
உரிய சொல்லால் இசை மாலைகள் ஏத்தி * உள்ளப் பெற்றேற்கு *
அரியது உண்டோ எனக்கு? * இன்று தொட்டும் இனி என்றுமே 6

என்றும் ஒன்றாகி * ஒத்தாரும் மிக்கார்களும் * தன் தனக்கு
இன்றி நின்றானை * எல்லா உலகும் உடையான் தன்னை **
குன்றம் ஒன்றால் மழை காத்த பிரானைச் * சொல் மாலைகள் *
நன்று சூட்டும் விதி எய்தினம் * என்ன குறை நமக்கே? 7

நமக்கும் பூவின் மிசை நங்கைக்கும் * இன்பனை * ஞாலத்தார்
தமக்கும் * வானத்தவர்க்கும் பெருமானை ** தண்தாமரை
சுமக்கும் பாதப் பெருமானைச் * சொல் மாலைகள் * சொல்லும் ஆறு
அமைக்க வல்லேற்கு * இனி யாவர் நிகர் அகல் வானத்தே? 8

வானத்தும் வானத்துள் உம்பரும் * மண்ணுள்ளும் மண்ணின் கீழ்த்
தானத்தும் * எண்திசையும் தவிராது நின்றான் தன்னை **
கூனற்சங்கத் தடக் கையவனைக் * குடம் ஆடியை
வானக் கோனைக் * கவி சொல்ல வல்லேற்கு * இனி மாறு உண்டே? 9

உண்டு உமிழ்ந்தும் கடந்தும் இடந்தும் * கிடந்து நின்றும் *
கொண்ட கோலத்தொடு வீற்றிருந்தும் * மணங்கூடியும் **
கண்ட ஆற்றால் தனதே * உலகென நின்றான் தன்னை *
வண்தமிழ் நூற்க நோற்றேன் * அடியார்க்கு இன்ப மாரியே 10

** மாரி மாறாத தண்ணம்மலை * வேங்கடத்து அண்ணலை *
வாரி மாறாத பைம்பூம் பொழில் சூழ் * குருகூர் நகர் **
காரி மாறன் சடகோபன் * சொல் ஆயிரத்து இப்பத்தால் *
வேரி மாறாத பூ மேல் இருப்பாள் * வினை தீர்க்குமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---